A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 60 / 2022**

திரு T.R. சீனிவாசன்,
S/o. ராமசந்திர நாயுடு,
எண். 155, T.R.S. இல்லம்,
நரசிங்கபுரம் கிராமம் மற்றும் அஞ்சல்,
ஆலங்காயம் வழி, வாணியம்பாடி தாலுக்கா,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 701.

………மேல்முறையீட்டாளர்
(திரு T.R. சீனிவாசன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / ஆலங்காயம்,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 KV SS துணை மின் வளாகம்,
வேலூர் மெயின் ரோடு, ஆலங்காயம்,
வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் – 635 751.

3) உதவி மின்பொறியாளர்/ இ&ப / ஆலங்காயம்,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 KV SS துணை மின் வளாகம்,
வேலூர் மெயின் ரோடு, ஆலங்காயம்,
வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் – 635 751.

...... எதிர்மனுதாரர்கள்
(திரு A. பாட்ஷா, செயற்பொறியாளர்/ இ&ப/வாணியம்பாடி
திரு J. சரவணன், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / ஆலங்காயம்
திரு. N. சம்பத், உதவி மின்பொறியாளர்/ இ&ப / ஆலங்காயம்)

**மனு பெறப்பட்ட நாள்: 21-07-2022**

**கேட்புரை நாள்: 20-10-2022**

**ஆணை நாள்: 29-11-2022**

21.07.2022 அன்று பெறப்பட்ட திரு T.R. சீனிவாசன், S/o. ராமசந்திர நாயுடு, எண். 155, T.R.S. இல்லம், நரசிங்கபுரம் கிராமம் மற்றும் அஞ்சல், ஆலங்காயம் வழி, வாணியம்பாடி தாலுக்கா அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 60/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.10.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

சர்வே எண் 108/1A இல் அமைந்துள்ள கிணற்றுக்கு இலவச மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 சர்வே எண் 108/1 இல் (தற்சமயம் 108/1A இல்) அமைந்துள்ள கிணற்றுக்கு இலவச மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் ஆலங்காயம் பிரிவு அலுவலர் விண்ணப்பத்தின் படி பதிவு செய்யப்பட்ட நில அளவை குறிப்பிட்ட கிணறு இருக்கும் இடத்தினை ஆய்வு செய்யப்பட்டதில் கிணறு மூடப்பட்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டது கண்டறியப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரர் நிலைப்பாட்டிற்கு எதிராக தனது கிணற்றுக்கு இலவச மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 07.03.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம், 12.05.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 12.05.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் தீர்வு</u>:*
*30.3.2022 மற்றும் 12.05.2022 ஆகிய தேதிகளில் நடைப்பெற்ற நுகர்வோர் குறைதீர்ப்பு கூட்ட விசாரணையின் போது இருதரப்பிலும் வைக்கப்பட்ட வாதங்கள் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களை கூர்ந்தாய்வு செய்ததில் மனுதாரர் விவசாய மின் இணைப்பு விண்ணப்பித்ததில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 108/1 ல் இருந்த கிணற்றை முழுவதுமாக மூடிவிட்டு ஒருபகுதியை வீட்டு மனையாக விற்றுவிட்டு எஞ்சிய பகுதியில் (தற்போதைய சர்வே எண் 108/1A ல்) புதியதாக தோண்டப்பட்ட பள்ளத்திற்கு மின் இணைப்பு கோருகிறார் என்பது தெளிவாகிறது. தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி 56(V) திருத்த உத்தரவின்படி நில உரிமையாளர் கிணறு மற்றும் மின் இணைப்பினை தக்க வைத்து கொண்டு சம்மந்தப்பட்ட நிலம் வேளாண் அல்லாத பிற தேவைக்கு விற்பனை செய்யப்பட்டு இருந்தால் கூட மின் இணைப்பு இட மாற்றம் பரிசீலிக்கப்படும். மனுதாரர் தனக்கு சொந்தமான இடத்தை மனைகளாக மாற்றியபின் கிணறு உள்ள இடத்தை மட்டும் தன் பெயரில் வைத்திருந்தால் தனக்கு சொந்தமான வேறு நிலத்திற்கு சர்வே எண் மாற்றம் செய்து மின் இணைப்பு பெற்றிருக்கலாம். ஆனால் மனுதாரர் அவ்வாறு செய்யாமல் சர்வே எண் 108/1 ல் உள்ள கிணற்றை முழுவதுமாக மூடிவிட்டு மனைகளாக மாற்றி விற்றுவிட்டதால் மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்து இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 20.10.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு T.R. சீனிவாசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு A. பாட்ஷா, செயற்பொறியாளர்/ இ&ப/வாணியம்பாடி, திரு J. சரவணன், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / ஆலங்காயம் மற்றும் திரு. N. சம்பத், உதவி மின்பொறியாளர்/ இ&ப / ஆலங்காயம், திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் கடந்த 20.10.2009 அன்று அவருடைய தனிப் பட்டா சர்வே எண் : 108/1 தற்போது 108/1A1–ல் தனிபட்டாவாக உள்ள கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்க உரிய வருவாய்துறை சான்று சமர்ப்பிக்க அவருக்கு 16.10.2021 அன்று வாணியம்பாடி மின் செயற்பொறியாளர் அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றதாக தெரிவித்துள்ளார்.

5.2 இதற்கு கடந்த நவம்பர் 2021 அன்று கிணறு முழுவதும் நீர் நிரம்பிய புகைப்படத்துடன் கிணற்றுக்குரிய கிராம நிர்வாக அலுவலர் சான்று மற்றும் சிட்டா, அடங்கல், வரைப்படம் ஆகியவை சமர்ப்பித்தும் அவருக்கு இன்று வரை மின் இணைப்பு வழங்கபடவில்லை எனவும், தான் மின் இணைப்பு கோரிய போது 1 ஏக்கர் 2 செண்ட் நிலம் இருந்ததாகவும், தற்போது நிலப்பரப்பு 35 செண்ட் விற்பனை செய்யப்பட்டு விற்பனை போக 57 செண்ட் நிலம் பாசனத்திற்குரிய நிலமாக அவரது பெயரில் தனிப்பட்டாவாக உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 கடந்த 07.03.2022 ஆம் தேதியில் தனிப் பட்டாவாக உள்ள சிட்டாவை இணைத்து கிணறு அமைந்துள்ள பகுதி தனிப்பட்டா எண் : 1234 அவரது பெயரில் தனியாக பட்டா உள்ளது என கோரிக்கை விடுத்தும் தான் விற்பனை செய்யப்பட்ட நிலப்பரப்பு இளவசரன் மற்றும் வடிவேல், சண்முகம் ஆகியோருக்கு தனி பட்டாவாக 108/1A2 மற்றும் 108/1A3 விடுவித்தும் தனக்கும் அதற்கும் சம்மந்தமில்லாமல் விடுவிக்கப்பட்ட பிறகும் வாணியம்பாடி மின் செயற்பொறியாளர் அவர்கள் வட்ட மின் குறைதீர்ப்பு அலுவலகத்தில் இன்னும் தனது கிணறு கூட்டு பட்டாதாரர்கள் சண்முகம் வடிவேல் இளவரசன் ஆகியோர் பெயர்களும் இருப்பதாக பொய்யான அறிக்கை சமர்ப்பித்ததாகவும், தனது கிணற்றில் உள்ள பங்கை தான் யாருக்கும் விற்கப்படவில்லை எனவும், மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இந்த நிலையில் கடந்த 07.03.2022 அன்று மின் இணைப்பு வழங்க கோரி திருப்பத்தூர் வட்ட மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் மனு சமர்ப்பித்ததாகவும், இதன் பேரில் காலம் கடந்த 30.3.2022 அன்றைய தேதியில் கிணறு அமைந்துள்ள பகுதி புல எண் 108/A1 என்று தனி பட்டா எண் 1234 பரப்பளவு 9.22 அதாவது 9 ஏர்ஸ் அல்லது 23 செண்ட்குரிய தனி பட்டா வழங்கியும் வட்ட குறைதீர்ப்பு மன்ற தலைவர் அவர்கள் தனது 67 செண்ட்குரிய பரப்பளவை கவனத்தில் கொள்ளாமலும் கிணறு முழுவதும் நீர் நிரம்பிய புகைப்படம் தான் சமர்ப்பித்தும் அதை கருத்தில் கொள்ளாமல், கிணறு அமைந்துள்ள புல எண் : 108/1A1–ல் கிணற்றின் முழு பங்கும் தனது பெயரில் தனி பட்டாவாக உள்ளது என தெரிவித்தும் அவர் கருத்தில் கொள்ளாமல் அலட்சியமாக இருந்துவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேலும் கடந்த 12.05.2022 அன்று விசாரணை நடைபெற்ற பொழுது வாணியம்பாடி மின் செயற்பொறியாளர் அவர்கள் பொய்யான கருத்து தெரிவித்ததை மட்டும் கேட்டுக்கொண்டு தனது 67 செண்ட் மற்றும் நிலத்தை 23 செண்ட் மற்றும் நிலமும் உள்ளதாக கூறிய வாணியம்பாடி மின் செயற்பொறியாளர் பாட்ஷா முஹம்மத் அவர்களின் கருத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு தனது 50 செண்ட் நிலத்திற்கு குறைவாக 23 செண்ட் மட்டும் உள்ளதாக மின் இணைப்பு வழங்க இயலாது என காலம் கடந்து 04.06.2022 அன்றை கடிதத்தில் முன் தேதியாக 12.05.2022 அன்று குறிப்பிட்டு காலம் கடத்தி தமக்கு இறுதி அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், தனக்கு

மின் இணைப்பு வழங்க இயலாது என திருப்பத்தூர் வட்ட குறைதீர்ப்பு மன்றம் பதில் கடிதம் வழங்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 எனவே தான் விவசாய மின் இணைப்பு கோரிய போது 1 ஏக்கர் 2 செண்ட் நிலம் இருந்ததாகவும், தற்பொழுது தனக்கு தனிப்பட்டாவாக 57 செண்ட் நில பட்டா எண்: 1234 தன்னிடம் உள்ளதாகவும், பாசனத்திற்குரிய நிலமாக உள்ளதாகவும், எனவே மின்வாரிய விதிமுறைபடி 50 செண்ட் நிலம் இருந்தால் விவசாய மின் இணைப்பு வழங்கலாம் என விதிமுறை இருந்தும் தமக்கு 67 செண்ட் இருந்தும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும், மேலும் கிணற்றில் எவ்வித பங்கும் யாருக்கும் விற்பனை செய்யப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 பழைய புல எண் : 108/1, புதிய புல எண்: 108/1A1 ஆக உள்ளதாகவும், இந்த கிணறு அமைந்த நீர் பகுதி மேல்முறையீட்டாளர் இதுவரை யாருக்கும் விற்பனை செய்யவில்லை எனவும், இது தனது பெயரில் தனி பட்டாவாக உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 எனவே மேற்கண்ட விண்ணப்ப பதிவு எண் : 10169-ன்படி சாதாரண முன்னுரிமை 2013 நீடிக்கப்பட்டுள்ளதால் தனது பதிவு ஆண்டு 2009 எனவும், எனவே தான் நவம்பர் 2022-இல் சமர்ப்பித்துள்ள கிணற்றுக்குரிய சான்றிதழ் படி தனக்கு இலவச மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா, ஆலங்காயம் வழி, நரசிங்கபுரம் கிராமம், திரு.T.R.சீனிவாசன் த/பெ. ராமச்சந்திர நாயுடு அவர்கள் இவ்வலுவலகத்தில் ஆரம்பத்தில் நரசிங்கபுரம் கிராம சர்வே எண்108/1 இல் 0.22.0 ஏர்ஸ் புஞ்சை நிலத்தில் பாசனம் செய்து விவசாயம் செய்ய அவற்றில் அமைத்திருந்த கிணற்றுக்கு மின்இணைப்பு பெறுவதற்காக மேற்படி கிராம சர்வே எண்ணிற்கான வருவாய் ஆவணங்கள் அளித்து வாணியம்பாடி கோட்ட அலுவலகத்தில் சாதாரண முன்னுரிமை திட்டத்தில் பதிவு எண்:10169/20.10.2009 இன்படி பதிவு செய்திருந்ததாகவும், மேலும் இந்த விண்ணப்ப பதிவிற்கு 18.11.2009 அன்று திருத்தியமைக்கப்பட்ட சுயநிதி திட்டம் ரூ.25000/- திட்டத்தில் மின்இணைப்பு பெற ரூ. 500/- 18.11.2009 அன்று கட்டணம் செலுத்தியுள்ளதாகவும், மேலும் திரு T.R.சீனிவானான் அவர்கள் 20.10.2009

அளித்துள்ள விருப்பக் கடிதத்தில் தான் ஏற்கனவே பூந்தோட்ட மின்இணைப்பு மேற்படி கிணற்றில் பெற்று பயன்படுத்தி வருவதாகவும், விவசாய மின்இணைப்பு வரும்போது பூந்தோட்ட மின் இணைப்பை இரத்து செய்துகொள்கிறேன் என தெரிவித்திருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இந்நிலையில், தமிழ்நாடு அரசு அறிவித்த ஒரு இலட்சம் விவசாய மின்இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டின் இலக்கீட்டில் மேற்படி நபரின் விவசாய விண்ணப்பம் (RSFS 25,000/-) திருத்தியமைக்கப்பட்ட சுயநிதி திட்டத்தில் (2021-2022) மின்இணைப்பு வழங்குவது தொடர்பாக ஆலங்காயம் பிரிவு அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 விவசாய மின்இணைப்பு பெறுவதற்காக மேற்படி விண்ணப்பதாரர் தயார் நிலை பதிவு வேண்டி க.எண்.செபொ/இ&ப/வாணி/வஆ/கோ.சுயநிதி திட்டம்/ எண்:20, நாள்:16.10.2021 ன்படி கண்ட அறிவிப்பு கடிதம் பதிவு அஞ்சல் மூலம் அவர்களுக்கு இவ்வலுவலகத்தின் மூலம் அறிவிப்பு செய்து அவர் ஏற்கனவே பதிவு செய்துள்ள சர்வே எண்ணிற்கான உரிய வருவாய் ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்று கிராமியம்/ஆலங்காயம் பிரிவு அலுவலகத்தில் அளித்திட அனுப்பப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இதன்பேரில் திரு T.R.சீனிவாசன், த/பெ. ராமச்சந்திர நாயுடு அவர்கள் 108/1A வில் வட்ட கிணறு உள்ளதாக தெரிவித்து 20.10.2021 நாளிட்ட நரசிங்கபுரம் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் கையொப்பம் இடப்பட்டு அவரிடமிருந்து பெறப்பட்ட வருவாய் ஆவணங்கள் கிராமியம்/ஆலங்காயம் பிரிவு அலுவலகத்தில் அளித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 அந்த வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் ஆலங்காயம் கிராமிய பிரிவு அலுவலர் அவர்கள் 'அசல் விண்ணப்பத்தின் படி பதிவு செய்யப்பட்ட நில அளவை எண்:108/1-ல் குறிப்பிட்ட கிணறு இருக்கும் இடத்தினை ஆய்வு செய்யப்பட்டதில் கிணறு முழுவதுமாக மூடப்பட்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு இருந்தது கண்டறியப்பட்டது. மேலும், அசல் விண்ணப்பம் பதிவு செய்யும்போது இந்த அசல் விண்ணப்பத்தின்படி பதிவு செய்யப்பட்ட கிணற்றில் அப்போது 433-009-431/3A1 என்ற பூந்தோட்ட மின்இணைப்பு இயங்கி வந்துள்ளது தெரியவருகிறது.

திரு.T.R.சீனிவாசன் த/பெ. ராமச்சந்திர நாயுடு அவர்களே RSFS விவசாய விண்ணப்பம் பதிவு செய்யும்போது 20.10.2009 அன்று அளித்த மனுவில் விவசாய மின்இணைப்பு பெற்றுக்கொள்ளும் போது மேலே குறிப்பிட்டுள்ள பூந்தோட்ட மின்இணைப்பை (3A1) நிரந்திர மின்துண்டிப்பு செய்துக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளதாகவும், மேலும் பதிவு செய்யப்பட்ட கிணற்றில் 433–009–431, 3A1 என்ற பூந்தோட்ட மின்இணைப்பு 29.07.2008 அன்று பெறப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 பூந்தோட்ட மின்இணைப்பு உள்ள நில அளவை சர்வே எண்:108/1 ஐ வீட்டு மனைகளாக மாற்ற வேண்டி இருப்பதினால் 07.10.2013 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே கள ஆய்வில் அசல் விண்ணபத்தின்படி பதிவு செய்யப்பட்ட கிணறு முழுமையாக மூடப்பட்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு உள்ளது கண்டறியப்பட்டுள்ளது மற்றும் பழைய கிணறு அமைத்த இடம் தற்போது எண்:108/1B–ல் இருந்துள்ளது கள ஆய்வில் தெரிய வருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேலும் முழுமையாக கள ஆய்வு செய்ததில் சுற்றப்புறத்தில் வேறு எந்த கிணறும் இல்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலையில் விண்ணபதாரர் 25.10.2021 அன்று அளித்துள்ள வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் களஆய்வு செய்தபோது புதியதாக தோண்டப்பட்ட பள்ளம் சுமார் 9.0 அடி அல்லது 10.0 அடி ஆழத்தில் சர்வே எண்:108/1A–ல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 உதவி செயற்பொறியாளர்/ இ&ப/ ஆலங்காயம் அவர்கள் இவ்வலுவலகத்திற்கு அளித்துள்ள அறிக்கையில் "ஆலங்காயம் கிராமியம் பிரிவு அலுவலர் அவர்களின் அறிக்கையின்படி ஆலங்காயம்/கிராமியம் பிரிவிற்குட்பட்ட திரு.T.R.சீனினாசன், த/பெ. ராமச்சந்திர நாயுடு, நரசிங்கபுரம் அவர்களின் விவசாய விண்ணபத்தின்பேரில் மின்இணைப்பு வழக்கும் நடவடிக்கைக்காக 25.10.2021 அன்று கள ஆய்வு மேற்கொண்டதில் அசல் விவசாய விண்ணபத்தின் படி பதிவு செய்யப்பட்ட நில அளவை எண்:108/1 ல் குறிப்பிடப்பட்ட கிணறு முழுவதுமாக மூடப்பட்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு இருந்தது கண்டறியப்பட்டுள்ளது என்றும் அசல் விண்ணப்பம் பதிவு செய்யும்போது இந்த அசல் விண்ணபத்தின் படி பதிவு

செய்யப்பட்ட கிணற்றில் அப்போது 433-009-431 கணக்கில் 3A(1) விகிதபட்டியில் இயங்கி வந்துள்ளது தெரியவருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேலும் பதிவு செய்யப்பட்ட கிணற்றில் 433-009-431, 3A(1) என்ற பூந்தோட்ட மின்இணைப்பு 29.07.2008 அன்று பெறப்பட்டுள்ளதாகவும், பூந்தோட்ட மின்இணைப்பு உள்ள நில அளவை சர்வே எண்: 108/1 ஐ வீட்டு மனைகளாக மாற்ற வேண்டி இருப்பதினால் 07.10.2013 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே கள ஆய்வில் அசல் விண்ணப்பத்தின்படி பதிவு செய்யபட்டுள்ள கிணறு முழுமையாக மூடப்பட்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்று அறிக்கையில் தெரிவித்துள்ளதை உதவி செயற்பொறியாளர்/ இ&ப/ ஆலங்காயம் அவர்கள் Lr.No:253/AEE/O&M/AGMF/ Agri Applicatiion: 2021-2022/2021-2022, Dt:23.12.2021 என்ற கடிதத்தின்படி தனது பரிந்துரை அறிக்கையில் தெரிவித்துள்ளதை தொடர்ந்து பரிசீலனை செய்ததில் திரு.T.R.சீனிவாசன், த/பெ.ராமச்சத்திர நாயுடு அவர்கள் மின்இணைப்பு வேண்டி அளிக்கப்பட்ட வருவாய் ஆவணங்களில் கணினி சிட்டா 108/1A ல் 0.14.30 ஏர்ஸ் நிலம் கூட்டாக 1. ராமச்சந்திர ரெட்டி மகன் சீனிவாசன், 2. ராஜி மகன் சண்முகம் 3. ரவி மகன் இளரவசன், 4. ரவி மகன் வடிவேல் ஆகியோருக்கு உள்ளதாகவும், தொடர்ந்து 108/1, 108/1A சொத்து தொடர்பான வில்லங்கச்சான்று ஆகியவற்றை ஆய்வு செய்ததில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு சொத்தின் வகைப்பாடு Plot ஆக உள்ளது கண்டறியப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 திரு.T.R.சீனிவாசன் த/பெ. ராமச்சந்திரன் அவர்கள் அளித்துள்ள 108/1A இல் உள்ள நான்கு பேருக்கும் இந்த சொத்து வீட்டு மனைகளாக போடப்பட்டு 12:11.2010 அன்று பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் திரு.T.R.சீனிவாசன், த/பெ.ராமச்சந்திர நாயுடு அவர்களுக்கு சொந்தமான Plot-ல் கிணறு என்று குறிப்பிட்டுள்ள இடத்தை கூட்டாக ஆய்வு செய்ததில் புதியதாக JCB-ல் தோண்டப்பட்ட பள்ளம் உள்ளது கண்டறியப்பட்டதாகவும், எனவே திரு.T.R.சீனிவாசன், த/பெ. ராமச்சந்திர நாயுடு அவர்கள் 20.10.2009 அன்று பதிவு எண்:10169-ன் படி பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தில் உள்ள வருவாய் ஆவணங்களின்படி 108/1 இல் பதிவு செய்யப்பட்ட கிணறு முழுமையாக மூடப்பட்டுவிட்டு மனைகளாக போடப்பட்டு அதில் இருந்து பூந்தோட்ட மின்இணைப்பு எண்:433-009-431, வீதப்பட்டி IIIA(1) 07.10.2013

அன்று நிரந்தர மின்துண்டிப்பு செய்யப்பட்டுவிட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 இதற்கிடையில் மறுபடியும் 30.03.2022 அன்று உதவி செயற்பொறியாளர்/ இ&ப/ ஆலங்காயம் மற்றும் உதவி பொறியாளர்/ இ&ப / கிராமியம்/ ஆலங்காயம் ஆகியோர் கூட்டாக ஆய்வு செய்ததில் சர்வே எண்:108/1–இல் ஒரு குடியிருப்பு வீடு அமைந்துள்ளது. இந்த வீட்டிற்கு பின்புறம் ஏற்கெனவே பூந்தோட்ட மின் இணைப்பு (433–000–431) வீதப்பட்டி 3A(1) துண்டிப்பு செய்யப்படும்போது மின் இணைப்பு ஓயர் (Service Wire) எடுக்கப்பட்ட தாழ்வழுத்த மின்கம்பம் அமைந்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 வீட்டின் வலப்புறம் பார்க்கும்போது தாழ்வழுத்த மின்கம்பத்திற்கும் மற்றும் புதியதாக தோண்டப்பட்ட பள்ளத்திற்கும் உள்ள இடைவெளி தூரம் 55.0 மீட்டர் ஆகும். இது இடது புறம் பார்க்கும்போது தாழ்வழுத்த மின்கம்பத்திற்கும் புதியதாக தோண்டப்பட்ட பள்ளத்திற்கும் உள்ள கிடைவெளி தூரம் 46.0 மீட்டர் ஆகும் மின்சார வாரிய விதிகளின்படி மின் இணைப்பு Mere Category வழங்குவதற்கு மின்கம்பத்தில் இருந்து அதிகபட்ச தூரம் 30 மீட்டர் ஆகும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.13 ஆனால் தாங்கள் தற்போது புதியதாக தோண்டப்பட்டுள்ள பள்ளம் தான் ஏற்கனவே விவசாய அசல் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கிணறு என்று கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை எனவும், ஏனெனில் ஏற்கனவே 108/1 சர்வே எண்ணில் ஆரம்பத்தில் இருந்து இருக்கும் தாழ்வழுத்த மின்கம்பத்தில் இருந்து 30.0 மீட்டர் தொலைவுக்குள் தற்போது தோண்டப்பட்டுள்ள பள்ளம் இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.14 இந்நிலையில் மீண்டும் 30.04.2022 அன்று செயற்பொறிளர் மற்றும் உதவி செயற்பொறியாளர்/ இ&ப / ஆலங்கயம் அவர்களும், உதவி பொறியார்/ இ&ப/ கிராமியம் ஆலங்காயம் அவர்களும் கூட்டாக ஆய்வு செய்ததில் நரசிங்கபுரம் கிராம எண்108/1 ல் வீட்டு மனைகள் போடப்பட்டு மூடப்பட்ட கிணற்றுக்கு ஓரமாக வலது புறத்தில் திரு.T.R. சீனிவாசன், ஊரிலிருந்து ரணமாரியம்மன் கோவிலுக்கு செல்லும் மண் சாலை இருப்பது கண்டறியப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.15 Memo No.CE/Plg&RC/SE/RE&ID/EE/RE/A1/F.Agri Target/2021-2022/D644 Dt. 16.12.2021 If the Land for which AGL Service connection is applied is converted to plot or any other activities other than AGL purpose then the application has to be cancelled immediately and intimated to the applicant duly quoting the reasons for cancellation என்று குறிப்பிட்டுள்ளது அசல் விண்ணப்பத்தின்படி 108/1 ல் உள்ள கிணற்றுக்கு பதிவு செய்த இந்த இடம் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு முழுமையாக மூடப்பட்டு விற்கப்பட்டுவிட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.16 ஆகையால், விவசாய விண்ணப்ப பதிவு எண்.10169/20.10.2009 கொண்ட திரு. T.R.சீனிவாசன், த/பெ.ராமச்சந்திர நாயுடு அவர்களின் பெயரில் உள்ள விவசாய விண்ணப்பம், மேற்கூறிய வலுவான காரணங்களினால் மின்இணைப்பு வழங்குவதற்கு தகுதியில்லாததால் திரு.T.R.சீனிவாசன், த/பெ.ராமச்சந்திர நாயுடு அவர்களின் 108/1 சர்வே எண்ணிற்கு விவசாய் மின்இணைப்பு வழங்கப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 மேற்கண்ட வழக்கில் மேல்முறையீட்டாளர் தனது சர்வே எண் 108/1 -ற்கு விவசாய மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று முறையிட்டுள்ளார். எனவே இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

1. மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரும் கிணறு விண்ணப்பித்த நாளிலிருந்த அதே கிணறு தானா?

2. மேல்முறையீட்டாளர் தற்போதுள்ள கிணற்றுக்கு மின் இணைப்பு கோரும் கோரிக்கை ஏற்புடையது தானா?

**8.0 <u>வழக்கெழு வினா 1-ற்கான தீர்வு:</u>**

8.1 திரு.T.R. சீனிவாசன் த/பெ. ராமச்சந்திர நாயுடு அவர்கள் நரசிங்கபுரம் கிராம சர்வே எண்108/1 இல் 0.22.0 ஏர்ஸ் புஞ்சை நிலத்தில் பாசனம் செய்து விவசாயம் செய்ய அதில் அமைத்திருந்த கிணற்றுக்கு மின்இணைப்பு வேண்டி சாதாரண முன்னுரிமை திட்டத்தில் பதிவு எண்:10169/20.10.2009 இன்படி பதிவு செய்துள்ளதாகவும், மேலும் இந்த விண்ணப்ப பதிவிற்கு 18.11.2009 அன்று திருத்தியமைக்கப்பட்ட சுயநிதி திட்டம்

ரூ.25000/- திட்டத்தில் மின்இணைப்பு பெற ரூ. 500/- 18.11.2009 அன்று கட்டணம் செலுத்தியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

8.2 இந்நிலையில், தமிழ்நாடு அரசு அறிவித்த ஒரு இலட்சம் விவசாய மின்இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டின் இலக்கீட்டில் மேற்படி நபரின் விவசாய விண்ணப்பம் (RSFS 25,000/-) திருத்தியமைக்கப்பட்ட சுயநிதி திட்டத்தில் (2021-2022) மின்இணைப்பு வழங்குவது தொடர்பாக ஆலங்காயம் பிரிவு அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. விவசாய மின் இணைப்பு பெறுவதற்காக மேற்படி விண்ணப்பதாரரின் தயார் நிலை பதிவு வேண்டி அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

8.3 இதன்பேரில் திரு T.R.சீனிவாசன், த/பெ. ராமச்சந்திர நாயுடு அவர்கள் 108/1A வில் வட்ட கிணறு உள்ளதாக தெரிவித்து 20.10.2021 நாளிட்ட நரசிங்கபுரம் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் கையொப்பம் இடப்பட்டு அவரிடமிருந்து பெறப்பட்ட வருவாய் ஆவணங்களை கிராமியம்/ஆலங்காயம் பிரிவு அலுவலகத்தில் அளித்துள்ளார்.

8.4 விவசாய மின் இணைப்பு கோரிய போது 1 ஏக்கர் 2 செண்ட் நிலம் இருந்ததாகவும், தற்பொழுது நிலப்பரப்பு 35 செண்ட் விற்பனை செய்யப்பட்டு விற்பனை போக தனக்கு தனிப்பட்டாவாக 57 செண்ட் நிலம் பாசனத்திற்குரிய நிலமாக நில பட்டா எண்: 1234 தனது பெயரில் தனிப்பட்டாவாக உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

8.5 அந்த வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் கள ஆய்வு செய்யும் போது நில அளவை எண்:108/1-ல் குறிப்பிட்ட கிணறு இருக்கும் இடத்தில் இருந்த கிணறு முழுவதுமாக மூடப்பட்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

8.6 விவசாய மின் இணைப்பு பதிவு எண்:10169/20.10.2009 விண்ணப்பத்தின்படி பதிவு செய்யப்பட்ட கிணற்றில் அப்போது 433-009-431/3A1 என்ற பூந்தோட்ட மின்இணைப்பு 29.07.2008 அன்று வழங்கப்பட்டு இயங்கி வந்துள்ளதாகவும், மேலும் RSFS விவசாய மின் இணைப்பு பதிவு செய்யும் போது மேலே குறிப்பிட்டுள்ள பூந்தோட்ட மின்இணைப்பை நிரந்தர மின் துண்டிப்பு செய்து கொள்கிறேன் என்று மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

8.7 பூந்தோட்ட மின்இணைப்பு உள்ள நில அளவை சர்வே எண்: 108/1 ஐ வீட்டு மனைகளாக மாற்ற வேண்டி இருப்பதினால் 07.10.2013 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே கள ஆய்வில் அசல் விண்ணப்பத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ள கிணறு முழுமையாக மூடப்பட்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.8 தற்போது மின் இணைப்பு கோரும் கிணறு கிராம நிர்வாக அலுவலரால் சான்றளிக்கப்பட்ட வட்ட கிணறாக இல்லாமல் JCB மூலம் புதியதாக தோண்டப்பட்ட சதுர வடிவான பள்ளமாக இருப்பதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் 439-009-431 என்ற மின் இணைப்பு 24.7.2008-இல் பெறப்பட்டு பின்பு 7.10.2013 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டது என அலுவலக குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.

8.9 மேலும் பூந்தோட்ட மின் இணைப்பு வழங்கும் போது மின்சார வாரிய விதிகளின்படி மின் இணைப்பு mere service வழங்குவதற்கு மின் கம்பத்திலிருந்து அதிகபடியான தூரம் 30 மீட்டருக்குள் இருக்கும்படியாக கொடுத்திருக்க வேண்டும். இதை உறுதி செய்யும் பொருட்டு கள ஆய்வில் அந்த மின்கம்பம் இன்றுவரையும் பயன்பாட்டில் இருப்பது தெரிய வருகிறது. ஆனால் தற்போதுள்ள பள்ளத்திற்கும் மின் கம்பத்திற்கும் உள்ள இடைவெளி 55 மீட்டர் இருப்பதாக தெரிய வருகிறது. எனவே, 29.7.2008-இல் பூந்தோட்ட மின் இணைப்பு பெறப்பட்ட கிணறும் தற்சமயம் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட பிறகு புதிய சர்வே எண்ணில் மின் இணைப்பு கோரும் கிணறும் ஒன்றல்ல என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

8.10 இது சம்பந்தமாக தயார்நிலை பதிவு செய்யக் கோரும் காலகட்டத்தில் உள்ள தமிழ்நாடு மின் பகிர்மான விதியின் Notification No. TNERC/DC/8-27 dated 16.07.2020 - இல் 27(2)(c)(d)(e)-ஐ ஆராய விரும்புகிறேன். அதன் பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"(c) As and when the applicant's turn comes in the order of seniority, the Licensee shall issue a 90 days notice to the applicant to ascertain whether the particulars given in the application such as ownership of the well and land, S.F. No(s) are the same as on date. Proper acknowledgement from the applicant for having received the notice shall be obtained and preserved. Motor-pump set and capacitor shall not be insisted at this stage. On receipt of particulars from the applicant, the section officer shall make a field Inspection for confirmation of the particulars and enter the particulars in the readiness register maintained in the section office. The date of entering particulars in the readiness register shall be reckoned as the seniority for preparing estimate."*

*(d) If there is any change in the name of the ownership and/or S.F. number, extent of land, change of location of well/bore well, a fresh application shall be made. Necessary approval for the change shall be accorded by the registering authority. Thereafter, the section officer shall inspect the site and enter the particulars in the readiness register.*

*(e) If the applicant or the present owner is not able to furnish the above particulars within the notice period, he may seek extension of time with the registering authority. The extension of time may be granted up to a maximum period of five years from date of receipt of notice. Even if no request is made by the applicant for extension of time, the Distribution licensee shall keep the application registered live for a period of five years. On expiry of five years, the application shall be treated as lapsed and cancelled."*

8.11 மேற்கண்ட விதிகளின்படி விண்ணப்பதாரரின் முறை, வரிசை எண் வரிசையில் வரும்போது, உரிமதாரர், கிணற்றின் மற்றும் நிலத்தின் உடைமையுரிமை குறித்து விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், நில அளவைப் புல எண்கள் ஆகியவை அந்தத் தேதியில் மாறாமல் உள்ளதா என்று கண்டறிவதற்கு அறிவிப்பு வழங்குதல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட தேதியன்று விண்ணப்பதாரரால் சான்றளிக்கப்பட்ட நிலத்தின் சர்வே எண். மற்றும் அதிலுள்ள கிணறு ஆகியவை தயார் நிலை அறிவிப்பு வழங்கிய தேதியில் சரியாக இருப்பதை உறுதிசெய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பத்தில் உள்ள விவரங்கள் உள்ளது உள்ளபடியே இருக்கும்பட்சத்தில் உடைமையாளரின் பெயரில் மற்றும் அல்லது நில அளவைப் புல எண், நிலத்தின் அளவு, கிணற்றின்/ ஆழ்குழாய்க் கிணற்றின் இடமாற்றம் ஆகியவற்றிற்கு உடைமையாளருக்கு உரிமை உள்ளது என தெரிய வருகிறது.

8.12 இந்நிலையில் மேற்கண்ட விதியின்படி, மேல்முறையீட்டாளருக்கு தயார் நிலை பதிவு வேண்டி 16.10.2021–இல் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேல்முறையீட்டாளர் 20.10.2021 அன்று உரிய ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார். சமர்ப்பிக்கப்பட்ட வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் கள ஆய்வு செய்த போது நில அளவை எண்.108/1–இல் மின் இணைப்பு கோரும் கிணறு பூந்தோட்ட மின் இணைப்பு வழங்கும் போது இருந்த வட்ட கிணறாக இல்லாமல் முழுமையாக மூடப்பட்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுவிட்டது தெரிய வருகிறது.

8.13 மேலும் அந்த கிணறுக்கு மின் இணைப்பு வழங்கிய மின்கம்பம் அதே இடத்தில் இருப்பதும் உறுதியாகின்றது. ஆனால் தற்சமயம் மேல்முறையீட்டாளர் சர்வே எண் 108/1A JCB மூலம் புதியதாக தோண்டப்பட்ட சதுர வடிவான நீர்தேங்கியுள்ள பள்ளத்திற்கு மின் இணைப்பு கோரியுள்ளார். எதிர்மனுதாரர் அனுப்பிய ஆவணங்களை ஆய்வு செய்த போது அந்த பள்ளம் வட்ட கிணறாக இல்லாமல் கால்நடைகள் உள்ளே சென்று வருகின்ற சிறிய பள்ளமாக இருப்பது தெரிய வருகிறது. மேலும் இந்த பள்ளத்திற்கும் 2008-இல் இருந்த வட்ட கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்கிய மின்கம்பம் தற்சமயம் 30 அடிக்குள் இல்லாமல் 55 அடி மற்றும் 46 அடியில் இருப்பதும் அறிய வருகிறது. ஆகவே, 2009 ஆம் ஆண்டு பதிவு செய்த விண்ணப்பத்தில் கூறப்பட்ட வட்ட கிணறும் மேல்முறையீட்டாளர் தற்சமயம் கிணறு என்று கூறுவதும் ஒன்றல்ல என்று தெரிய வருகிறது.

9.0 <u>வழக்கெழு வினா 2-ற்கான தீர்வு:</u>

9.1 பத்தி 8-ல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரும் நில அளவை எண் 108/1A-இல் குறிப்பிடும் கிணறு, தயார் நிலை அறிவிப்பு வழங்கிய தேதியில் உடைமையாளரின் விண்ணப்பம் மற்றும் கிராம நிர்வாக அலுவலரால் சான்றழிக்கப்பட்ட வட்டக் கிணறாக இல்லாமல் வெறும் பள்ளமாக இருப்பது உறுதி செய்யப்பட்ட நிலையில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் தகுதியிழந்த விண்ணப்பமாக கருதப்படவேண்டும். மேலும், 20.10.2009 அன்று விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட சர்வே எண்.108/1-ல் பதிவுசெய்யப்பட்ட நிலத்தில் உள்ள கிணறு முழுவதுமாக மூடப்பட்டு சர்வே எண்ணும் பிரிக்கப்பட்டு தற்பொழுது வீட்டு மனைகளாக மாற்றம் செய்ததும் உறுதி செய்யப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் பரிசீலிக்க தகுந்தது அல்ல என தீர்வு செய்யப்படுகிறது.

**10.0 <u>முடிவுரை</u>:**

10.1 பத்தி 8 மற்றும் 9-இல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரும் நில அளவை எண் 108/1A-இல் குறிப்பிடும் கிணறு, தயார் நிலை அறிவிப்பு வழங்கிய தேதியில் உடைமையாளரின் விண்ணப்பம் மற்றும் கிராம நிர்வாக அலுவலரால் சான்றழிக்கப்பட்ட வட்டக் கிணறாக இல்லாமல் வெறும் பள்ளமாக இருப்பது உறுதி செய்யப்பட்ட நிலையில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் தகுதியிழந்த விண்ணப்பமாக கருதப்படவேண்டும். மேலும், 20.10.2009 அன்று

விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட சர்வே எண்.108/1–ல் பதிவுசெய்யப்பட்ட நிலத்தில் உள்ள கிணறு முழுவதுமாக மூடப்பட்டு சர்வே எண்ணும் பிரிக்கப்பட்டு தற்பொழுது வீட்டு மனைகளாக மாற்றம் செய்ததும் உறுதி செய்யப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் பரிசீலிக்க தகுந்தது அல்ல என்பதால் இம்மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

10.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 60/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

1. T.R. சீனிவாசன், – By RPAD
S/o. ராமசந்திர நாயுடு,
எண். 155, T.R.S. இல்லம்,
நரசிங்கபுரம் கிராமம் மற்றும் அஞ்சல்,
ஆலங்காயம் வழி, வாணியம்பாடி தாலுக்கா,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 701.

2. செயற்பொறியாளர்/ இ&ப/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப / ஆலங்காயம்,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 KV SS துணை மின் வளாகம்,
வேலூர் மெயின் ரோடு, ஆலங்காயம்,
வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் – 635 751.

4. உதவி மின்பொறியாளர்/ இ&ப / ஆலங்காயம்,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 KV SS துணை மின் வளாகம்,
வேலூர் மெயின் ரோடு, ஆலங்காயம்,
வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் – 635 751.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2/4B, பாலம்மாள் காலனி, திருப்பத்தூர் – 635 601.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.